# அரியலூர் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td colspan="4">அரியலூர் நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் 11.12.2020ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00மணிக்கு தனிஅலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.</td></tr>
<tr><td>11.12.2020</td><td>400</td><td>
<u>பொருள் எண். 01</u><br>
அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21ன் கீழ் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>நகராட்சியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்)</th><th>சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்)</th><th>நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்)</th></tr>
<tr><td>அரியலூர்</td><td>3.50</td><td>3.15</td><td>0.35</td></tr>
</table>
மேற்படி, வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>சாலையின் தன்மை</th><th>சாலையின் நீளம் கி.மீ</th><th>சாலையின் அகலம் மீ</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>சிப்பம் 1<br>வார்டு எண்.03 எத்துராஜ் நகர், வார்டு எண்.09 சஞ்சீவிராயன் கோவில் தெரு, வார்டு எண்.10 வ.உ.சி தெரு மற்றும் வார்டு எண்.14 கைலாசநாதர் கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல்</td><td>தார் சாலை</td><td>2.400</td><td>5.00, 4.50 & 10.50</td><td>200.00</td></tr>
<tr><td>2</td><td>சிப்பம் 2<br>வார்டு எண்.10 மீனாட்சி நகர், வார்டு எண்.02 முனியப்பர் தெரு, வார்டு எண்.05 கே.கே. நகர், வார்டு எண்.04 பூக்காரத்தெரு, வார்டு எண்.12 கீழத்தெரு, வார்டு எண்.15 பெருமாள் கோவில் தெரு, வார்டு எண்.07 பங்களா தெரு மற்றும் நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்திற்கு அணுகு சாலை புதுப்பித்தல்</td><td>தார் சாலை</td><td>2.800</td><td>4.00, 4.50, 5.00 & 6.00</td><td>150</td></tr>
<tr><td></td><td>மொத்தக்கூடுதல்</td><td></td><td>5.200</td><td></td><td>350.000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>11.12.2020</td>
<td>401</td>
<td>
<u>பொருள் எண். 02</u><br>
அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு போன்றவற்றை பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு நாடகங்கள் நடத்த உத்தேச செலவினம் ரூ.15,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>11.12.2020</td>
<td>402</td>
<td>
<u>பொருள் எண். 03</u><br>
அரியலூர் நகராட்சியின் மூலம் அரசு பொது மருத்துவமனை வளாத்தில் NULM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் உட்புற நோயாளிகளின் உடனிருப்போர் தங்கும் விடுதிக்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ள 11.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Thiru. S.Raja, Ariyalur</td><td>1.12% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Thiru.Sudhakar, Ariyalur</td><td>1.26% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.12% குறைவாக கொடுத்த Thiru.S.Raja, Ariyalur என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>11.12.2020</td>
<td>403</td>
<td>
<u>பொருள் எண். 04</u><br>
அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு போன்ற நாடகங்கள் நடத்த 09.12.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>K.கிருஷ்ணகுமார், தஞ்சை கலைமகள் நாடக மன்றம், தஞ்சாவூர்</th><th>R.ஆனந்தி கலைக்குழு, தஞ்சாவூர்</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துதல்</td><td>ரூ.5,000/- (நிகழ்ச்சி ஒன்றிற்கு)</td><td>ரூ.6,000/- (நிகழ்ச்சி ஒன்றிற்கு)</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய K.கிருஷ்ணகுமார், தஞ்சை கலைமகள் நாடக மன்றம், தஞ்சாவூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 11.12.2020 | 404 | <u>பொருள் எண். 05</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகராட்சி வரையுள்ள குடிநீர் விநியோக பிரதான குழாயில் பொருத்தப்பட்டுள்ள ஏர்வால்வு, ஸ்கர்வு வால்வு வேலை செய்யாததால் பிரதான குழாயில் உடைப்பு ஏற்படும் சமயம் குடிநீரை வெளியேற்றிய பிறகு தான் பணி செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு இயக்கப்படும் போது மேற்கண்ட வால்வுகள் பழுதடைந்துள்ளதால் உடைப்பு சரி செய்வதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட ஏர் வால்வு, ஸ்கர்வு வால்வும், வழியோக கிராமங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை கணக்கிடுவதற்கு கட்டுப்பாட்டு மீட்டர் ஆகியவைகளை கொள்முதல் செய்யவும், அண்ணாசிலை முதல் உழவர் சந்தை மற்றும் MGR நகர் வரை குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் மற்றும் இனிவரும் காலம் கோடைக்காலம் என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 11.12.2020 | 405 | <u>பொருள் எண். 06</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான கல்லூரி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியின் சுற்றுச்சுவர் இடிந்து விட்டதால், புதிய சுற்றுச்சுவர் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள திட்டமதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் மற்றும் இனிவரும் காலம் கோடைக்காலம் என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 11.12.2020 | 406 | <u>பொருள் எண். 07</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டத்தில் செயல்படும் 50HP மின்மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், அதனை சரி செய்யும் நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதில் தொய்வு ஏற்படுவதை சரி செய்திட புதிய 50HP மின் மோட்டாரினை 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்திட ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் மற்றும் இனிவரும் காலம் கோடைக்காலம் என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 11.12.2020 | 407 | <u>பொருள் எண். 08</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 200KVA டிரான்ஸ்பார்மர் 2012ம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. தற்போது கூடுதல் மின்சுமை பயன்படுத்தப்படுவதால் 200KVA டிரான்ஸ்பார்மருக்கு மாற்றாக 250KVA டிரான்ஸ்பார்மர் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் புதிதாக மாற்றி அமைத்திட ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் மற்றும் இனிவரும் காலம் கோடைக்காலம் என்பதால் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 11.12.2020 | 408 | <u>பொருள் எண். 09</u><br>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் வீடு வீடாக சென்று டெங்கு கொசு உற்பத்தியாகும் கலன்களை அளித்தல் டெங்க நோய் ஏற்பட்டவர்களை மருத்துவ முகாம்களுக்கு அனுப்பிவைத்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல் மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல் ஆகிய பணிகளை நவம்பர் மாதம் | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>முதல் தனியார் சுயஉதவிகுழு கணக்கெடுப்பாளரை கொண்டு பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கும் ஏப்ரல் 2021 வரை கவிக்குயில் மகளீர் சுயஉதவி குழு மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் பணியை உடன் மேற்கொள்ள வழங்கப்பட்ட அறிவுரையின்படி நவம்பர் மற்றும் டிசம்பர் 2020க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கியும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.12.2020</td>
<td>409</td>
<td><u>பொருள் எண். 10</u><br>அரியலூர் நகராட்சியின் மூலம் Kfw திட்டத்தின் மூலம் மூன்று நீர்நிலைகள் மேம்படுத்தப்பட்டு வருவதில் அரியலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் ஆய்வின்போது வழங்கப்பட்ட அறிவுரையின்படி, பணிகள் மேற்கொள்ள திட்டமதிப்பீட்டில் வழிவகை இல்லாத காரணத்தினால் கீழ்காணும் பணிகளில் கூடுதலாக இனங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th colspan="2">அய்யப்பன் ஏரி</th><th colspan="2">பள்ளி ஏரி</th><th colspan="2">வண்ணான்குட்டை</th></tr>
<tr><td>MS angle Tube benches</td><td>206.67 Kg</td><td>Brick work 1:5 mix ratio</td><td>2.25 $m^3$</td><td>2core 16sqmm copper cable</td><td>279.90 RM</td></tr>
<tr><td>110mm dia PVC pipe etc,.</td><td>15.00 RM</td><td>Plastering cement mortar 1:3 mix 20 mm</td><td>73.09 $m^2$</td><td>Supply of 25mm dia PVC pipe.</td><td>231.90 RM</td></tr>
<tr><td>Steel</td><td>1340.13 Kg</td><td>Painting two coat emulsion</td><td>486.12 $m^2$</td><td>Rubberised paver block</td><td>412.16 $m^2$</td></tr>
<tr><td>25mm dia PVC pipe</td><td>433.00 RM</td><td>Mini mast light</td><td>1.00 No</td><td>Supply and fabrication of RTS bar.</td><td>141.38 Kg</td></tr>
<tr><td>Pointing 1:3 mix ratio RR masontry work.</td><td>713.60 $m^2$</td><td>3 core 16sqmm copper cable.</td><td>21.00 RM</td><td>Reinforcement cement concrete 1:1.5:3 mix ratio</td><td>1.04 $m^3$</td></tr>
<tr><td>65mm dia GI pipe</td><td>12.00 RM</td><td>Filling and leveling of course gravel</td><td>67.16 $m^3$</td><td>Brick work 1:5 mix ratio</td><td>10.69 $m^3$</td></tr>
<tr><td>White washing two coats</td><td>1033.92 $m^2$</td><td>Hume pipe</td><td>20.00 RM</td><td rowspan="2">Plastering cement mortar 1:5 mix</td><td rowspan="2">63.00 $m^2$</td></tr>
<tr><td>Painting two coats with ready mix paint.</td><td>517.39 RM</td><td>200mm dia DI pipe</td><td>4.50 RM</td></tr>
<tr><td>4' X 4" diamond mesh</td><td>73.50 RM</td><td rowspan="2">Labour charges laying and jointing hume pipe.</td><td rowspan="2">20.00 RM</td><td rowspan="3">Painting two coat emulsion</td><td rowspan="3">63.00 $m^2$</td></tr>
<tr><td>MS steel</td><td>32.00 Kg</td></tr>
<tr><td>Laying of 25mm dia PVC pipe</td><td>433.00 RM</td><td>Hire charges for JCB.</td><td>80.00 Hrs</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>மேற்காணும் கூடுதல் இனங்கள் பணியினை திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்தும், மற்றும் கூடுதலாக ஆகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>